## இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவகம் - 2014

இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, அங்கத்தவர் நிதியங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2016 செப்தெம்பர் 14 ஆந் திகதி அனுப்பப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானதும் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமல் ரூபா 141,920 அங்கத்தவர் கட்டணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 24,265 தொகையான கருத்தரங்கு செலவினங்கள் முன்னைய காலப்பகுதி விடயமாக கருதப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சர்வதேச கருத்தரங்கு ஒன்றிற்காக பெறப்பட்ட ரூபா 14,000 தொகை சர்வதேச கருத்தரங்கு வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நன்கொடைக் கணக்கு மற்றும் கருத்தரங்கு வருமானக் கணக்கு என்பவற்றிற்கு முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 4,000 செலவு ஆக வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவக அதிகாரச்சட்டம்<br>''ஏ'' பட்டோலையின் 5(2) ஆம் பிரிவு | நிறுவகத்தின் ஐந்து உறுப்பினர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக உறுப்புரிமைக் கட்டணங்களை செலுத்தியிருக்காத போதிலும் அவர்களின் |

| | |
|---|---|
| | உறுப்புரிமையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 சனவரி 06 இன் சபைத் தீர்மானம் | ஒவ்வொன்றும் ரூபா 250,000 ஆல் இரண்டு நிலையான வைப்புக் கணக்குகளிற்கு நடைமுறைக் கணக்கிலிருந்து ரூபா 500,000 மாற்றுவதற்கு சபை தீர்மானித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 143,801 தேறிய மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 561,874 தேறிய மிகையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 418,073 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் கற்கைநெறிகளிலிருந்தான வருமானத்தின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) நூல்நிலையங்களை ஸ்தாபித்துப் பேணுவதன் மூலம் மதிப்பீட்டு விஞ்ஞானத்துடன் தொடர்புடைய அல்லது இணைந்த அறிவுத்திறனை பெறுதல், பரப்புதல் மற்றும் பரிமாற்றுதல் என்பவற்றை முன்னேற்றுதல்.

(ஆ) நிறுவகத்தின் அங்கத்துவத்திற்காக தகுதிபெறும் பரீட்சைகளை நடாத்துவதற்காக வழிகாட்டுதல் அல்லது வழங்குதல் மற்றும் அத்தகைய பரீட்சைகளுக்காக கல்விக் கற்கைநெறியை வழங்குதல் அல்லது அங்கீகரித்தல் மற்றும் விரிவுரைகள் மற்றும் பரீட்சைகளை மேற்கொள்ளல் மற்றும் சம்பளம் வழங்குதல்

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகக் கட்டிடத்தின் ஆரம்ப வேலைகளிற்காக ஏற்பட்ட ரூபா 342,400 தொகை 2009 இலிருந்து நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகாரசபை (யூடிஏ) நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் காணியில் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு நிறுவகம் தவறியிருந்தமையால் குத்தகை உடன்படிக்கையை இரத்துசெய்வதற்குத் தீர்மானித்திருந்தது. ஆகையால், அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம்

பயனற்றவையாக காணப்பட்டன. நிறுவகத்தின் தலைவர் இந்த நோக்கத்திற்காக கொழும்பில் மாற்றுக் காணியொன்றை யூடிஏ விடுவித்திருந்ததென அறிவித்திருந்த போதும் இது தொடர்பில் ஆவணச்சான்றெதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது நிறுவகத்திற்கான வலைத்தளமொன்றை வடிவமைப்பதற்காக ரூபா 31,500 தொகை தனியார் கம்பனியொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் தனியார் கம்பனியின் செயற்பாடின்மை காரணமாக அத்தொகை பயனற்ற செலவினமாகக் காணப்பட்டது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 08 மாதங்கள் காலதாமதத்தின் பின்னர் 2015 செப்தெம்பர் 28 இலேயே கணக்காய்விற்கு 2014 ஆம் ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஏப்ரல் 01 இல் இது திருத்தப்பட்டு மீள சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்குகளில் பல வகைப்படுத்தல் தவறுகள் காணப்பட்டன. |
| (ஆ) | பாதீடு | பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |